இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்வி முதுமாணி
இறுதிப் பரீட்சை – 2007
ESP 2317 – ஆசிரியர் கல்வி
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

028

திகதி: 15.07.2007 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. (i) 'வாண்மைத்துவம்' என்ற தொடரினை வரைவிலக்கணப்படுத்துக.

(05 புள்ளிகள்)

(ii) வெற்றிகரமான வகுப்பறைக் கற்பித்தலுக்கு ஆசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய ஐந்து பிரதான வாண்மைத்திறன்களை விபரிக்க.

(10 புள்ளிகள்)

(iii) ஆசிரியர்களிடம் இவ்வாறான வாண்மைத்திறன்கள் விருத்தி செய்யப்படும் போது மாணவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளைப் பரிசீலிக்க.

(08 புள்ளிகள்)

(iv) இத்தகைய வாண்மைத்திறன்களை ஆசிரியர்களிடம் உச்ச அளவிற்கு விருத்தி செய்வதற்காக இலங்கையில் அறிமுகப்படுத்தக்கூடிய மூன்று புத்தாக்க ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

2. (i) 'தொலைக்கல்வி' என்ற எண்ணக்கருவினை வரைவிலக்கணப்படுத்துக.

(05 புள்ளிகள்)

(ii) ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு உலகெங்கிலும் உள்ள நாடுகள் தொலைக்கல்வி முறையை ஏன் பயன்படுத்துகின்றன என விளக்குக.

(07 புள்ளிகள்)

(iii) தொலைக்கல்வி முறையில் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதால் ஏற்படும் மூன்று அனுகூலங்களையும் மூன்று பிரதிகூலங்களையும் குறிப்பிடுக

(12 புள்ளிகள்)

(iv) நீங்கள் மேலே இனங்கண்ட பிரதிகூலங்களைக் குறைப்பதற்கு ஆலோசனைகளை முன்வைக்க.

(09 புள்ளிகள்)

3. (i) இலங்கையில் ஆசிரியர் வாண்மைத்துவத்தின் தரத்தினைப் பாதிக்கும் ஐந்து பிரதான பிர்ச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

(ii) நீங்கள் அடையாளங்கண்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை ஆராய்க.

(18 புள்ளிகள்)

4 'இலங்கையில் ஆசிரியர் கல்வி தொடர்பாக மிக முக்கிய விவகாரங்களில் ஒன்று வாண்மைத்திறன்கள் குறைவாக உடைய சேவையிலுள்ள ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் தேவையாகும்'.

(i) இலங்கையில் சேவைக்கால ஆசிரியர் கல்வி வழங்குவதற்கு கிடைக்கக்கூடிய வசதிவாய்ப்புக்களைச் சுருக்கமாகக் கூறுக.

(10 புள்ளிகள்)

(ii) இலங்கையில் உள்ள சேவைக்கால ஆசிரியர்கல்வி நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தெரிவு செய்க.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமான கற்பித்தற்பயிற்சியின் அமைப்புப்பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விளக்குக.

(10 புள்ளிகள்)

(iii) குறிப்பிட்ட கற்பித்தற் பயிற்சி அங்கத்தின் பலம் - பலவீனங்களை ஆராய்க.

(13 புள்ளிகள்)

5. (i) 1994இல் இலங்கை ஆசிரியர் சேவை அமைக்கப்பட்டமை தொடர்பில் செல்வாக்குச் செலுத்திய சமூக, பொருளாதார மற்றும் கல்விக் காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) ஆசிரியர் கல்விச்சேவை அமைக்கப்பட்டதன் விளைவாக இலங்கையில் ஆசிரியர்களின் மேல்நோக்கிய சமூக நகர்வு இடம்பெற்றுள்ளதா என ஆராய்க.

(10 புள்ளிகள்)

(iii) இலங்கை ஆசிரியர் சேவையை அமுலாக்குவதில் முகம் கொடுக்கவேண்டியிருந்த தடைகள் மூன்றினைப் பரிசீலிக்க.

(13 புள்ளிகள்)

6. பின்வரும் கூற்றுக்களில் எவையேனும் மூன்று பற்றிக் கருத்துரைக்க.

(i) 'இலங்கையின் கல்வித் தரத்தை மேம்படுத்துவது, ஆசிரியர் ஆட்சேர்ப்பு மற்றும் ஆசிரியர் பகிர்வினை ஒழுங்குமுறைப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது'.

(ii) 'இலங்கையின் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஆசிரியருடைய வாண்மைவிருத்தியைவிட ஆசிரியரது உரிமைகள் மற்றும் சலுகைகள் பற்றியே கூடிய கரிசனை கொண்டுள்ளன'.

(iii) 'ஆசிரியரது தொழில்வாண்மை அந்தஸ்தினை மேம்படுத்துவதற்கு இலங்கை ஆசிரியர்களுக்கான ஒழுக்கக்கோவை இன்றியமையாத தொன்றாகும்'.

(iv) 'பாடசாலை கலைத்திட்ட அபிவிருத்திச் செயன்முறையில் ஆசிரியர்கள் பங்குபற்றுதல் முக்கியமானதாகும்'.

(11 x 3 = 33 புள்ளிகள்)

(99 + 1 = 100 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)